மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்.

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | 27/2015 C/W OS.No.122/2015 | சாட்சி | பி.வா.சா.1 |
| பெயர் | இந்திராணி | நாள் | 24.03.2025 |
| கணவர் பெயர் | கோவிந்தராஜ் | | |

**வாதிகள் தரப்பில் பி.வா.சா.1 ஐ குறுக்கு விசாரணை:-**

1) வாதிகள் என்ன வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால், என்னுடைய சொத்தில் அவர்களுக்கும் பாகம் வேண்டும் என கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள். இவ்வழக்கும், அ.வ.எண்.122/2015 என்ற வழக்கும் இணைந்து விசாரணை நடைபெறுகிறது என்றால், சரிதான். எனக்கு எந்த சர்வே எண்ணில், எவ்வளவு சொத்து பாத்தியப்பட்டுள்ளது என்றால், ச.எண்கள்.356/A72, 356A74 ஆகியவற்றில் மொத்தம் 0.92 சென்ட் நிலம் உள்ளது. வேறு சர்வே எண் உள்ளதா என்றால், இல்லை.

2) சண்முகம் என்பவர் யார் என்றால், என் மாமனார் ஆவார். மேற்படி சண்முகத்தின் முதல் மனைவியின் பெயர் என்னவென்றால் பொன்னி (எ) பாஞ்சாலி ஆகும். மேற்படி பொன்னி எப்போது இறந்தார் என்றால், அது குறித்து எனக்கு தெரியவில்லை. மேற்படி சண்முகத்திற்கும், பொன்னிக்கும் பிறந்த மகன் தான் கோவிந்தராஜ் என்றால் சரிதான். மேற்படி கோவிந்தராஜ் தான் என் முதல் கணவர் என்றால், எனக்கு அவர் மட்டும் தான் கணவர்.

3) மேற்படி சண்முகத்தின் இரண்டாவது மனைவி பெயர் என்னவென்றால், வெள்ளையம்மாள் ஆகும். சண்முகம் தன் முதல் மனைவி இறந்ததற்கு பின்னிட்டுதான் இரண்டாவதாக வெள்ளையம்மாள் என்பவரை திருமணம் செய்து கொண்டார் என்றால், சரிதான். மேற்படி சண்முகத்திற்கும், முதல் மனைவி பொன்னிக்கும் இரண்டு குழந்தைகள் என்றால், சரிதான். ஒருவர் கோவிந்தராஜ் என்றால், சரிதான். மற்றொருவர் பெயர் என்னவென்றால், அண்ணாமலை ஆகும். மேற்படி அண்ணாமலைக்கு திருமணம் ஆகிவிட்டதா என்றால், இல்லை. அவர் திருமணம் ஆகாமல் இறந்துவிட்டார்.

4) மேற்படி சண்முகத்திற்கும், வெள்ளையம்மாளுக்கும் பெரிய கவுண்டர், பெருமாயி, சந்திரசேகரன், குணசேகரன் என நான்கு வாரிசுகள் என்றால், சரிதான். இவ்வழக்கு நிலுவையிலிருக்கும் பொழுது பெரிய கவுண்டர் என்பவர் இறந்துவிட்டார் என்றால், சரிதான். அவருக்கு மனநிலை சரியில்லாமல் இருந்ததால், திருமணம் ஆகாமல் இறந்துவிட்டார் என்றால், சரிதான்.

5) மேற்படி சண்முகத்திற்கும், பொன்னிக்கும் பிறந்த மற்றொரு மகன் அண்ணாமலை என்பவர் எப்போது இறந்தார் என்றால், அது குறித்து எனக்கு தெரியாது. என் கணவர் கோவிந்தராஜ் எப்போது இறந்தார் என்றால், 10.05.1992 ம் தேதியில் இறந்தார். வாதிகள் அனைவரும் ச.எண்.356/7A8 ல் குடியிருந்து வருகிறார்கள் என்றால், சரிதான். என் கணவர் இறந்த பிறகு, நான் சோரையூரை சேர்ந்து பாலகிருஷ்ணன் என்பவரை நான் இரண்டாவதாக திருமணம் செய்து கொண்டேன் என்றால், சரியல்ல. மேற்படி திருமணத்தின் வாயிலாக எனக்கு இவ்வழக்கு தாக்கல் செய்த காலத்தில் 7 வயதில் ஒரு பெண் குழந்தை இருந்தது என்றால், சரியல்ல.

6) இவ்வழக்கில் வாதிகள் தாக்கல் செய்துள்ள உயில் ஓமலூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டது என்றால், சரிதான். ஆனால், அது செல்லாத ஒன்றாகும். மேற்படி உயில் ஆவணம் 01.09.2008 ம் தேதியில் பதிவு செய்யப்பட்ட உயில் என்றால், சரிதான். மேற்படி உயிலின் நகலை நான் பார்த்துள்ளேனா என்றால், நீதிமன்றத்திற்கு வந்ததற்கு பின்னிட்டு பார்த்துள்ளேன்.

(வாதிகள் தரப்பில் கேட்டுக்கொண்டதண்கிணங்க பி.வா.சா.1 ஐ குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறு ஒரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)

ஒம்/–திரு. R.மணிவர்மன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டுர்.